## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**
31 Kelantan Lane #01-16 S(200031)

## பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857
Bugis (EWL/DTL)
Rochor (DTL)
Lavender (EWL/DTL)
Farrer Parkr (DTL)

## எங்களுடன் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

HB-T-1
Printed - October 2016

# ஹபெடடைஸ் பி (HEPATITIS B)

NATIONAL
SKIN
CENTRE

DSC Clinic

## ஹெபடைடீஸ் பி என்றால் என்ன?

இரத்தம் மற்றும் கல்லீரலில் வைரல் தொற்று ஏற்படுவது ஆகும். இந்த வைரஸ் தொற்றினால் கல்லீரல் வீக்கம் மற்றும் நீண்டகால கல்லீரல் நோய் ஏற்பட்டுவிடுகிறது.

## ஹெபடைடீஸ் பி பரவும் முறை

- பால்வினை நோயுற்ற ஒருவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்வதன் மூலம் பரவும்.
- நோய்த்தொற்று உள்ளவரிடமிருந்து இரத்தம் பெறும் போது பரவும்.
- நோயுற்றவர் உபயோகப்படுத்திய ஊசிகளை நாம் பயன்படுத்தும் போது பரவும்.
- நோயுற்ற தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவும்.
- இரத்தக்கசிவு ஏற்படும் இடங்களில் பயன்படுத்தக்கூடிய பொருள்களான முகச்சவரம் செய்யும் பொருள் மற்றும் பல்துலக்கும் பொருள்களை நாம் பயன்படுத்துவதால் பரவும்.

## ஹெபடைடீஸ் பி - ன் அறிகுறிகள்:

- மிதமான காய்ச்சல்
- அடிவயிற்றுப்பகுதியில் வலி
- அடர்நிறத்தில் சிறுநீர் கழித்தல், தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமாதல் (மஞ்சள் காமாலை)
- உடல் வலிமை இழத்தல் மற்றும் வாந்தி ஏற்படுதல்
- கல்லீரல் பாதிப்பு ஏற்படுதல்

## அறிகுறிகள் தெரிவது எப்போது?

தொற்று ஏற்பட்டு 1-6 மாதங்களில் அறிகுறிகள் தெரியும்.

## பரிசோதனை யாருக்குத் தேவை?

ஹெபடைடீஸ் பி தடுப்பூசி போட்டுக்கொள்ளாத எவரும் தற்போது இப்பரிசோதனையை செய்து கொள்ளலாம்.

- பாலுறவு கொள்ளும் நபர் மற்றும் பாலியல் தொழில் புரிவோரிடம் பாதுகாப்பற்ற உடலுறவு கொள்ளுதல்
- ஊசிகள் எடுத்துக்கொள்ளும் போது காயம் ஏற்பட்டிருந்தால் அல்லது போதைப்பொருள் எடுத்துக்கொள்ளும் பழக்கம் உள்ளவராக இருந்தால்
- உங்கள் வீட்டில் வசிக்கும் யாருக்கேனும் ஹெபடைடீஸ் பி தொற்று இருந்தால்
- ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவராக இருந்தால் மற்றும்
- எச்.ஐ.வி. பாஸிடிவாக இருந்தால் இப்பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

## ஹெபடைடீஸ் பி கண்டறியும் முறை:

- இரத்தப் பரிசோதனை செய்து, இரத்தத்தில் உள்ள வைரஸை சோதித்தல் அல்லது
- தடுப்பூசிகள் எடுத்த பின்பு உடலில் உள்ள எதிர்உயிரிகள் செயலாற்றும் விதம் போன்றவற்றால் கண்டறியலாம்.

## ஹெபடைடீஸ் பி குணப்படுத்த முடியுமா?

ஹெபடைடீஸ் தொற்றை குணப்படுத்த மருந்துகள் உள்ளன. மருத்துவரிடம் ஆலோசனை பெற்று செயல்படவும்.

## ஹெபடைடீஸ் பி பக்கவிளைவுகளை ஏற்படுத்துமா?

ஹெபடைடீஸ் பி தொற்று ஏற்பட்ட பலர் இன்று மருந்துகள் உட்கொண்டு குணமடைந்துள்ளனர். சிலருக்கு இது குணப்படுத்த முடியாத ஒன்றாக மாறி கல்லீரல் செயலிழப்பு மற்றும் கல்லீரல் புற்றுநோய் ஏற்படுகிறது.

## கர்ப்பகாலத்தில் ஹெபடைடீஸ் பி:

கருவுற்றிருக்கும் போது ஹெபடைடீஸ் பி தொற்று ஏற்பட்டிருந்தால் மருத்துவரிடம் தெரிவித்து கருவில் உள்ள குழந்தைக்கு தொற்று ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.

## முக்கிய குறிப்புகள்:

- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்திருந்தால் தடுப்பூசிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். 3 டோஸ்கள் ஆறுமாத காலத்திற்கு ஒரு முறை கொடுக்கப்படுகிறது. இது 90% அதிகமான பாதுகாப்பை நீண்டகாலத்திற்கு அளிக்கிறது.
- உடலுறவின் போது ஆணுறை அணிந்து கொள்வது நோய்த்தொற்றிலிருந்து உங்களை பாதுகாக்கும்.
- நோய்த்தொற்று இருந்தால் தொடர் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வது நோயின் ஆரம்ப நிலையிலேயே அதை குணப்படுத்த உதவும்.
- பல் மருத்துவரிடம் பரிசோதனைக்கு செல்லும் போது முன்பே நோய்த்தொற்றைப்பற்றி கூறுவது அவர் சரியான முன்னெச்சரிக்கையுடன் செயல்பட பெரிதும் உதவும்.

பாதுகாப்பான செக்ஸ் கடைபிடிக்கவும்:

- உடல் திரவங்கள் பரிமாற்றம் இல்லாமல் செக்ஸ் (யோனி சுரப்பு மற்றும்விந்து).
- தவறாமல் ஆணுறை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தவும்
- செக்ஸ் முன் அல்லது போது அதிக அளவில் மது குடிக்க தவிர்க்கவும், இது உங்கள் கவனத்தை பாதிக்ககூடும்.